# பொலிஸ்காரருக்கும் சட்டத்தரணிக்கும் கத்திக்குத்து
# வெள்ளவத்தையில் பல தமிழ் இளைஞர்கள் கைது

வெள்ளவத்தையில் வீதியால் வந்த இரு தமிழ் இளைஞர்களை மறித்து இரு சிங்களப் பொலிஸார் சோதனையிட்டசமயம் ஒரு கான்ஸ்டபிளுக்கு அந்த இளைஞர்களால் கத்தியால் குத்தப்பட்டதையடுத்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது. அவ்விளைஞர்கள் தப்பிச்சென்று சட்டத்தரணி ஒருவரிடம் தமது நிலைமையைக் கூறவே அவரும் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனால் அச்சட்டத்தரணியும் கத்திக்குத்துக்கு உள்ளாகி பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த இரு இளைஞர்களிடம் ஒரு தொகைப்பணம் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ்காரருக்கு கத்திக்குத்து விழுந்த இடத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் அப்பகுதியால் சென்ற, கடைகளில் நின்ற சுமார் நூற்றுக்கணக்கான இளைஞர்களைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும், பொலிஸ் நிலையத்தில் பலமாக இவர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அடுத்த நாளும் இங்குள்ள கடைகள, லொட்ஜுகள், வீதிகளில் அடையாள அட்டையைப் பார்த்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். எழுபதுபேர் சித்திரவதையின் பின் விடுவிக்கப்பட்டனர். (ப-11


பக்கங்கள் நான்கு    விலை ரூபா: 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 29 பிரமோதூத மார்கழி 11 (26-12-1990) புதன்


## யர்ழ் நகரில் காஸ் விற்பனை என்று பணம் பறித்த வர்த்தகர் தலைமறைவு

யாழ் நகரில் சமையல் வாயு (காஸ்) விற்பனை செய்துவந்த வர்த்தகர் ஒருவர் காஸ் விற்பனை ஆரம்பிக்கப்போவதாகவும் கொழும்பிலிருந்து காஸ் வருகிறது என்றும் கூறி சில பாவனையாளர்களிடம் காஸ் சிலிண்டர்களையும், முற்பணத்தையும் பெற்றுக்கொண்டாராம்.

நாட்கள் சென்றன. பாவனையாளர் அவரிடம் சென்றனர். வழியில் பிரச்சினை, ஊரடங்கு இரண்டொரு தினங்களில் காஸ் வந்துவிடும் என்று பதில் கூறப்பட்டது. ஆனால் இதுவரையும் பாவனையாளர்களுக்கு காஸ் விநியோகிக்கப்படவில்லை. அத்துடன் அந்த விற்பனையாளர் தலைமறைவாகி விட்டதாகவும், பாவனையாளர் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவக்கப்படுகிறது. (71)

பளை, சாவகச்சேரிப் பகுதிகளில்

# நத்தார் தினத்திலும் விமானத் தாக்குதல்!

### வங்கி, எரிபொருள் நிலையம், வீடுகள் சேதம்

நத்தார் தினமான நேற்றுக்காலை இரு குண்டு வீச்சு விமானங்கள் சாவகச்சேரிப் பகுதியை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் இரு தடவைகள் தாக்கின. இத் தாக்குதலினால் நால்வர் காயமடைந்தனர். இரு குண்டுகள் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டன.

கண்டி வீதி-தபாற்கந்தோர் வீதிச் சந்திப்பகுதியே குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளானது

சாவகச்சேரி இலங்கை வங்கியும் பெற்றோல் நிரப்பு நிலையமும் ஒரு மாடி வீடு உட்பட நான்கு வீடுகளும் சேதமுற்றன.

இச்சம்பவத்தில் சொர்ணலிங்கம் நித்தியலட்சுமி(45), ஜி குலரத்தினம், இராமலிங்கம், ராஜகுலசிங்கம் (52) ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று வீசப்பட்ட ஏழு குண்டுகளில் மூன்று குண்டு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பளைச்சந்தை மீது குண்டுவீச்சு சில கட்டிடங்கள் சேதமாகின

நேற்றுக்காலை 8 30 மணியளவில் பளைச் சந்தைப்பகுதியில் மூன்று பொம்மர்கள் தாக்குதல் நடாத்தின.

யோரினது வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று பளைச்சந்தை தினமாக இருந்த போதிலும்தெய்

பகல் இரண்டுமணியளவில் இயக்கச்சியை அண்டிய பகுதிகளிலும் பொம்மர்களும், ஹெலி ஒன்றும் தாக்குதலை

சுகாதாரத்திணைக்களம்

## வடபகுதிக்கு சிங்களத்தில் சுற்று நிருபக் கடிதங்கள்

சுகாதார சேவைப் பகுதியின் தலைமைக்காரியாலயம் வடபகுதிக்குத் தொடர்ந்து தனிச் சிங்களத்திலேயே சுற்று நிருபங்களை அனுப்பி வருகின்றது.

சகல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் தாதிகளுக்கும தனிச் சிங்களத்திலேயே சுற்று நிருபங்களும், கடிதங்களும் வருவதால் பெரிதும் சிரமமடைந்து வருகின்றனர்.

அண்மையில் குழந்தைப் பிள்ளை மருத்துவத்திற்கான பயிற்சிக்காக விண்ணப்பம் கோரித் தாதிகளுக்குத் தனிச் சிங்களத்தில் சுற்று நிருபம் அனுப்பிவைத்திருந்ததால் தாதிகள் மொழி பெயர்க்க அலைந்து திரிந்தனர். (36)

## கூலியாள் பதவி விண்ணப்பம் ஆங்கிலத்தில் படிவங்கள்!

கிளிநொச்சியில் பல்கலைக் கழக விவசாய பீடத்தில் கூலியாள் பதவிக்கான விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்திலேயே விநியோகிக்கப்பட்டதால் பலர் விண்ணப்பத்தை நிரப்ப முடியாமல் கஷ்டமுற்றதாகத் தெரிகிறது

7-ம் வகுப்புத் தராதரத்தில் கூலியாள் பதவிக்காக விண்ணப்பம் செய்தவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளே கூடுதலானவர்களாவர்.

இதேசமயம் கூலியாள் பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் கிளிநொச்சி வாழ் மக்களுக்கே முன்னுரிமைவழங்க வேண்டுமென்று கிளிநொச்சியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (47)

சுகாதாரத்திணைக்களத்தில்

## தமிழ் உயர் அதிகாரியே நியமனங்களுக்கு முட்டுக்கட்டை!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசங்களில் நிலவும் பொது சுகாதார பரிசோதகர்களின் பற்றாக்குறையை

தில் சுகாதார அமைச்சில் கடமையாற்றும் தமிழரான ஓர் உயர் அதிகாரியே தடையாக இருந்து வருகிறார்

## திருமலையில் அகதிகள் முகாமில் 15 பேர் கைது

நேற்றுக்காலை 8 30 மணியளவில் பளைச் சந்தைப்பகுதியில் மூன்று பொம்மர்கள் தாக்குதல் நடாத்தின.

குண்டு வீச்சினால் பாலர் பாடசாலை, தபாற் கந்தோர், இருதயராஜ், கதிரமலை ஆகியோரினது வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று பளைச்சந்தை தினமாக இருந்த போதிலும் தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இதைத்தொடர்ந்து நண்பகல் இரண்டுமணியளவில் இயக்கச்சியை அண்டிய பகுதிகளிலும் பொம்மர்களும், ஹெலி ஒன்றும் தாக்குதலை நடாத்தின. (ப-3)

# இராணுவம் சினைப்பர் தாக்கு ட்ராக்டரில் சென்றவர் காயம்

நேற்றுக்காலை 8 25 மணியளவில் குறிஞ்சாத்தீவு உப்பளம் வழியாகச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்தை நோக்கி ஆனையிறவு முகாமில் உள்ள இராணுவத்தினர் சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனால் என். இராஜேந்திரன் (37) என்பவரும் இவருடன் பயணம் செய்த மற்றும் இருவரும் காயமடைந்தனர்.

கடந்த சில தினங்களாக ஆனையிறவு முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (74)

வலி. வடக்கில்

# ஷெல், ஹெலித் தாக்குதலால் பொருள்கள் மீட்க முடியா நிலை

கொட்டகப்புலம், வடமூலை கிழக்கு, தோலகட்டி கிழக்கு, சென் ஜேம்ஸ் பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டிருக்காத போதும் அப்பகுதியிலுள்ள வீடுகளில் இருந்து பல பெறுமதியான பொருள்களும், வெங்காயம், மிளகாய் போன்ற விவசாய உற்பத்திப் பொருள்களும் மீட்க முடியாத அளவுக்கு அழிந்து போகும் ஆபத்து நிலை தோன்றியுள்ளது.

அடிக்கடி இப்பகுதிகளில் ஏற்படும் ஷெல் தாக்குதல்களினாலும், ஹெலித்தாக்குதல்களினாலும் மக்கள் அப்பகுதி

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசங்களில் நிலவும் பொது சுகாதார பரிசோதகர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் விடயத்தில் சுகாதார அமைச்சில் கடமையாற்றும் தமிழரான ஓர் உயர் அதிகாரியே தடையாக இருந்து வருகிறார் என்று சுகாதாரப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பிரதேசங்களில் சுகாதாரப் பணியாளரினால் இளைப்பாறிய பொது சுகாதார பரிசோதகர் பதினாறு பேருக்கு மீண்டும் ஒரு வருட

—04 ஆம் பக்கம் பார்க்க

# கிழக்கில் கடும் மழை மட்டு - அம்பாறை துண்டிப்பு

கிழக்கில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருவதால் திருமலை தெற்கு மட்டக்களப்புப் பகுதியில் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. மட்டு-அம்பாறை வீதியில் பல இடங்களில் வெள்ளம் வீதியின் மேலாக ஓடுவதால் இரு மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அம்பாறையில் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தொடர்ந்தும் வடக்குக் கிழக்கில் மழைக்கான சாத்தியம் இருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது,

# திருமலையில் அகதிகள் முகாமில் 15 பேர் கைது

திருமலை நகரில் உள்ள கிளப்பன் பேர்க் அகதிகள் முகாமில் இருந்து 15 ஆண்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# தமிழக அரசு ஏமாற்றுகிறது என்கிறார் இந்தியப் பிரதமர்!

ஈழத் தமிழ்ப் போராளிகள் தொடர்பாகத் தமிழக அரசு தவறான வழிமுறையில் நடப்பதாகவும், வெறும் கண்துடைப்பு வேலைகளையே தமிழக அரசு மேற்கொண்டு வருவதாகவும் தமக்குப் புகார் கிடைத்துள்ளதாக இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காஞ்சிபுரம் வந்த பிரதமர் சந்திரசேகர் மேற்படி கருத்து வெளியிட்டுள்ளார். இப்படியான ஏமாற்று வேலைகளில்தமிழகம் ஈடுபடக்கூடாது எனத் தாம்தமிழக அரசைக் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசைக் கலைப்பது குறித்தான ஊகங்கள் குறித்து தமக்கு ஏதும் தெரியாது எனக் குறிப்பிட்ட பிரதமர் எனினும் மாநில அரசுகளை எச்சரிப்பது மத்திய அரசின் கடமையாகும் என்றார்.

# ஆடம்பரமின்றி இம்முறை நத்தார் கொண்டாட்டங்கள்

நேற்றைய தினம் நத்தார் கொண்டாட்டங்கள் ஆடம்பரம் அற்ற முறையில் எளிமையாக கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்பட்டது.

கிறிஸ்துவின் பிறப்பை உணர்த்தும் சொருபங்கள் மற்றும் கிறிஸ்மஸ் மரம் என்பன அலங்காரம் ஏதுமின்றி காணப்பட்டன.

பாசையூர் அந்தோனியார் ஆலயம், யாகப்பர் ஆலயம் புனித ஆரோக்கிய நாதர் ஆலயம், யாழ் ஆசனக் கோவில் ஆகியவற்றில் மக்

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ் இந்துக்கல்லூரியில்

# இரண்டாம்தர அதிபர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சி

அண்மையில் பதவி உயர்வு பெற்ற இரண்டாம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி யாழ் இந்துக்கல்லூரியில் காலை 8. 30 முதல் பகல் 2 30 வரை நடைபெறவுள்ளது (28-ம், 29-ம் திகதி)

யாழ் கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலையத்தி

—04 ஆம் பக்கம் பார்க்க

போற்றி அருளுக - 4

## ஒரு கண் நித்திரை மிஞ்சுமோ?

முத்துநகையையும் தம்முடன் சேர்த்துக் கொண்ட திருவெம்பாவைகள் — மார்கழி மங்கையர்கள் நித்திலம் என்பவளின் வீட்டு வாசலை அடைகிறார்கள். நித்திலம் நல்ல நித்திரை.

''நித்திலம், நித்திலம்!''
''என்ன? இன்னம் விடியவில்லையா?''
''எல்லாரும் வந்து விட்டீர்களா? வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ?''

''ஆம் ஒருவர் கூடக்குறையவில்லை. வேண்டுமானாற் சொல்லு எண்ணிக் காட்டுகிறோம்.''

''ஒன்று, இரண்டு, மூன்று, நாலு...''

''வேண்டாமடி நீ எண்ண வேண்டாம். எண்ணுகிறதற்கு ஓர் ஐந்தாறு விநாடிகளாவது எடுக்குமல்லவா? அந்தச் சொற்ப நேரத்துக்காவது ஒரு கண் நித்திரை மிஞ்சுமோ என்று பார்க்கிறாள் — நித்திலம்''

''அம்மா நித்திலம்!''
''நீயே வந்து எண்ணிப்பார்''
''விண்ணுக்கு ஒரு மருந்தை
வேத விழுப்பொருளை,
கண்ணுக்கு இனியானைப் பாடி,
கசிந்து
உள்ளம் உள்நெக்கு நின்றுருக
யாம் மாட்டோம்.
நீயே வந்து எண்ணிக் கொள்''

''அப்படி எண்ணிப்பார்த்துக் கணக்குச் சரியில்லை என்றால் நீ கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளலாம் — துண்டு விழும் கணக்கை நிரப்புவதற்கு ஆட்கள் வந்து சேரும் வரைக்கும். சரியோ?''

''மணியான யோசனை.''
''போடி, குறும்புக்காரிகளே! இதோ வந்து விட்டேன் வாருங்கள் போகலாம்.''

நித்திலத்தையும் தம்முடன் சேர்த்துக் கொண்டவர்கள் அப்பாலே போகிறார்கள்.

### இனிய குரலுடைய பெருமைக்காரி

''இனி யார் வீட்டுக்குப் போகவேண்டும்?''
''ஏலக்குழலியா?''
''ஆமாம், அவள்தான் ஏலக்குழலி புளுகுக்காரி, இல்லையா?''

''உண்மைதான், பெருமைக்காரியும் கூட!''
''என்றாலும், இனிமையான குரல், அவளுக்கு.''
''அதை நான் மறுக்கவில்லை. 'திருமாலும் பிரமனும் தேடியும் காணாத சிவபரம் பொருளை நாங்களே அறிவோம்' என்று சொல்லிப் பெருமையடிப்பாளே — அப்பொழுதுதான் அவளுடைய குரல் மிக மிக இனிமையாக அமைகிறது. இது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.'

''நான் அதை ஆமோதிக்கிறேன்''
''நான் அதற்கு ஆம் - ஓதுகிறேன்''
''நான் அதை வழிமொழிகிறேன்''
''நான் அதற்காக ஆசடு வழிகிறேன்''

மேற்படி தீர்மானம் திருவெம்பாவையர்களாகிய நம்மால் ஒருமனமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம் ''

''சரி, சரி அரட்டை அடித்தது போதும், பாடுவோமே ஒரு பாட்டு''

''ஞாலமே, விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று ...'
''ஓலமிட்டுப் பாட உறக்கம் கலைந்து எழுவாள்.''
''பாடுங்கள் ... பாடுங்கள் ...''

எல்லாரும் ஒருங்கு சேர்ந்து பாடுகிறார்கள். இசை

---

சகல பிள்ளைகளும் பாடசாலை செல்ல

# நிர்ப்பந்திக்கும் சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு வருகிறது!

ஐந்துக்கும், பதினாறுக்கும் இடைப்பட்ட சகல பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் சட்டமூலம் ஒன்றைக் கல்வியமைச்சு கொண்டுவரவுள்ளது.

இச்சட்டமூலத்தை அடுத்த வருட முற்பகுதியில் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சகல பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வியடைந்ததன் விளைவாகவே இவ்வலுவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உயரதிகாரிகள் இதுதொடர்பாக மேலும் தகவல் தருகையில் தெரிவித்தனர்.

---

விடுதலைப்புலிகள் பிரமுகர் தினேஷ் கூறுகிறார்

# தென்தமிழீழத்தில் நுளம்புகளின் ஓசையே மழலையின் தாலாட்டு!

''மனித இனத்திற்கு எங்கெங்கு கஷ்டங்கள், பிரச்சினைகள், ஆபத்துக்கள் நடைபெறுகின்றனவோ அங்கு உடனுக்குடன் சென்று உயிராபத்து நிகழாதவகையில் காப்பாற்றுவதற்காகவே சில தொண்டர் நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இங்கு வந்திருக்கும் சில நிறுவனமானது நோக்கத்தை மறந்து உலகத்திற்குக் காட்டுவதற்காகச் செயற்பட்டு வருகிறது. சேவையைத் தேடிச்சென்று செய்ய வேண்டிய இந்த நிறுவனங்கள் ஆபத்து ஏற்படும் போது ஸ்தலத்திற்குச் சென்று உடன் நடவடிக்கை மேற்கொள்கிறதா? சிந்தித்துப் பாருங்கள்.''

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் தென் தமிழீழ மக்களுக்கு நிதியுதவி கோரி நடாத்தப்பட்ட கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலக செயலாளர் திரு. தினேஷ் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலக கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. கணேசலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய அவர்:- எத்தனையோ கஷ்டங்கள், துன்பங்கள் மத்தியிலும் தென் தமிழீழ மக்களுக்கு உதவிகள் செய்வதை உலகம் உணர வேண்டும். தென் தமிழீழத்தில் 4 லட்சம் மக்கள் அகதிகளாக இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவி செய்ய நாம் ஒருவரும் பின் நிற்கக் கூடாது.

இங்கிருக்கும் எமது தாய்மார்கள் தமது குழந்தைகளைத் தூங்க வைக்க தாலாட்டுப் பாடுகிறார்கள். ஆனால் தென் தமிழீழத்திலுள்ள குழந்தைகளை நுளம்புகளே தாலாட்டுகின்றன.

அங்குள்ள பிள்ளைகளுக்கு ஒரு நேரச் சாப்பாடு கொடுக்க முடியாது மாங்காய் பறித்துக் கொடுப்பதற்குச் செல்லும் தாய்மார் பலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு மேலும் அவர் கூறினார். (12)

---

## 25கோடிடொலர்செலவில் மிதக்கும் கண் மருத்துவ மனை

சோவியத் யூனியனில் உள்ள தனியார் கண் மருத்துவ மனை ஒன்று, 25 கோடி டொலர் செலவில் கப்பலில் மிதக்கும் கண் மருத்துவமனை ஒன்றை அமைத்துள்ளது. ''பைடர்பெர்வி'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இக்கப்பல், உலகிலேயே தனியார் நிறுவனத்தினால் முதன் முதலாக உருவாக்கப்பட்ட கண் மருத்துவ மனையைக் கொண்டது என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இதில் மிக எளிதாகக் கண் அறுவைச் சிகிச்சை செய்யவும் பரிசோதனைகள் மேற்கொள்ளவும் பல நவீன சாதனங்கள் உள்ளன ஒரே நாளில் 1500 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடியும். ஆனால் விரிவான முறையில் பரிசோதனை செய்ய 600 டொலர்களும், அறுவைச் சிகிச்சை செய்ய 2000 டொலர்களும் செலுத்த வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. இந்த மருத்துவ மனையை உருவாக்கியவர்களின் இலட்சியம் (Beautiful Eye for Everybody) எல்லோருக்கும் அழகான கண்கள் என்பதே, என்று தெரிவிக்கப்படுகிறது. (16)

---

## கொர்பச்சேவுக்கு பலதிசை நெருக்குதல்

சோவியத் யூனியனில் நீடித்துவரும் பொருளாதாரச் சிக்கல்களினால் பலதிசைகளிலுமிருந்து சோவியத் அதி

---

கொள்ளை லாபம் தவிர்க்கப்படும்

## அப்பியாசக் கொப்பிகள் கப்பலில் தருவிக்கப்படும்

---

பிறவுண் வீதியில்

## வயோதிபரின் மர்மச் சடலம்

விளையாட்டு மைதானமாக்க வளவு ஒன்றை இளைஞர்கள் சிலர் துப்புரவு செய்ய முற்பட்டபோது அங்கு வயோதிபர் ஒருவரின் சடலம் சிதைந்த நிலையில் நேற்று முன்தினம் காணப்பட்டது.

இனம் தெரியாத இவ்வயோதிபர் இறந்து ஒரு மாதத்திற்குக் கூடுதலாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

யாழ் பிறவுண் வீதியில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (74)

---

கரம்பனில்

## வயோதிப தம்பதி சடலங்கள்

கரம்பனில் வயோதிபத் தம்பதியின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இளைப்பாறிய சிறாப்பர் வி. பெரியதம்பி (82 வயது) அவரது மனைவி ஆகியோரது சடலங்களே இவை.

விறகுகளுக்கு அடியில் இச் சடலங்கள் சில தினங்களுக்கு முன் கண்டெடுக்கப்பட்டன.

இராணுவத் துப்பாக்கிச் சூட்டின் மூலமே இம்மரணங்கள் சம்பவித்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (16)

---

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12164

### விற்பனைக்கு

சீர்திருத்த எழுத்துக்கள் அடங்கிய வண்ணப் பதிப்பு. அஷ்டலக்ஷ்மி பாலர்தமிழ் ரூபா 12/-. மொத்தமாகவும் கிடைக்கும் பூபாலசிங்கம், மண்டேலா யாழ்ப்பாணம். திருக்கணிதம், சிவம் மெடிக்கல், ஆசீர்வாதம் சாவகச்சேரி. அருள் நாயகி கொடிகாமம். 12149

### தவறிவிட்டது

தம்பையா பவீந்திரன், செட்டியகுறிச்சி, பூநகரி

''பாடுங்கள் ... பாடுங்கள் ...''

எல்லாரும் ஒருங்கு சேர்ந்து பாடுகிறார்கள். இசை வெள்ளம் பொங்கிப் பெருகிறது. விண்வெளி எங்கும் விரிந்து நிரம்புகிறது.

- 'சித்தமழகியான்'

சிக்கல்களினால் பலதிசைகளி லிலுமிருந்து சோவியத் அதிபர் திரு. மிக்கெயில் கொர்பச்சேவ் நெருக்குதல்களைப் பெற வேண்டியுள்ளது. பழமைவாதிகளுக்கும், புதுமை வாதிகளுக்கும் இடையே அவர் சிக்குண்டு தவிப்பது புரிகிறது. இதனால் மக்களின் குறைகளை அவரால் களைய முடியவில்லை.

மேற்கண்டவாறு ரெலிகிராப்ட் நாளேடு கருத்து வெளியிட்டுள்ளது.

சோவியத் நகர மக்கள் அமெரிக்க, ஜேர்மன் உணவுப் பொருட்களுக்குக் காத்திருக்க வேண்டிய நிலைமை வந்து விட்டது என்றும், இருதலைக் கொள்ளி எறும்பு நிலையில் திரு. கொர்பச்சேவ் திணறுகிறார் என்றும் இந்நாளேடு மேலும் கூறுகிறது

## மத்திய அரசு முக்கியத்துவம்

# சந்திரசேகர் ஜெயலலிதா இல்லம் செல்ல ஏற்பாடு

இந்திய மத்திய அரசு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கு தமிழக அரசியல் ரீதியில் அதி முக்கியத்துவம் அளித்துச் செயற்படத் தொடங்கி விட்டது என்பது இப்போது பகிரங்கமாகியுள்ளது.

பிரதமர் திரு. சந்திரசேகர் நேற்றைய தனது தமிழக விஜயத்தின்போது செல்வி ஜெயலலிதாவின் இல்லத்திற்கும் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று நேற்றுக் காலை சென்னை வட்டாரங்கள் தகவல் தந்தன.

சென்னை வந்ததும் காஞ்சிபுரம் சென்று பரமாச்சாரியத் சுவாமிகளைச் சந்தித்த பின் மீண்டும் சென்னை திரும்பி டாக்டர் பி. ஸி. ரெட்டி, செல்வி ஜெயலலிதா ஆகியோரது இல்லங்களுக்குச் சென்று விட்டு நேற்றிரவே அவர் புதுடில்லி செல்வதாக நிகழ்ச்சி நிரல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக இவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

# மன்னார் கடற் பகுதியில் மீன்பிடிக்க அரசு தடை

மறு அறிவித்தல் வரை மன்னார் அருகே கடலில் மீன் பிடிக்கக் கூடாதென ஸ்ரீலங்கா அரசு தடை விதித்திருப்பதாக நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

முள்ளிக்குளத்திற்கும் தலைமன்னாரின் தென்பகுதிக்கு மிடையே இத்தடையை அரசு விதித்திருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு ஒன்று தெரிவிப்பதாகவும் இச்செய்திகள் மேலும் கூறின.

# அப்பியாசக் கொப்பிகள் கப்பலில் தருவிக்கப்படும்

யாழ்மாவட்ட மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைக் கப்பல் மூலமாக கொழும்பிலிருந்து தருவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாணவர்களின் கல்வி எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில இப் பொருட்களைக் கொண்டுவருவதற்கு முன்னுரிமையளிக்கப்படும் என யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தற்போது இப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்துச் சில வியாபாரிகள் தாம் கைவசம் வைத்திருந்தவற்றை பல மடங்கு அதிக விலைக்கு விற்பனை செய்துவருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (66)

# பனை வள உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை

அடுத்த ஆண்டில் இருந்து உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு முக்கியத்துவம் அளித்து அவற்றை உற்பத்தி செய்வோர் ஊக்குவிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பனம் பொருள் உற்பத்தியை முழு அளவில் அபிவிருத்தி செய்யவிருக்கின்றது.

பனைமரத்தின் அடிவேரில் இருந்து ஓலைவரை சகல மூலப்பொருள்களும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படவிருக்கிறது.

பனம்சீனி, பனம்கட்டி, பனம்பாணி, ஒடியல்மா, பாய், கடகம், வீட்டுக்குத் தேவையான கால்துடைப்பம் மற்றும் பல பொருள்களையும் அதிகளவில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்குப் பல நோ. கூ. சங்கங்களும் தமது பூரண ஒத்துழைப்பை நல்க முன்வந்துள்ளன. (66)

தவறிவிட்டது

தம்பையா பவீந்திரன், செட்டியகுறிச்சி, பூநகரி எனும் பெயர் விலாசமுள்ள (இல 710493030V) தேசிய அடையாள அட்டை பூநகரிக்கும், கிளிநொச்சிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து பூநகரி எரிபொருள் நிலையத்தில் ஒப்படைக்கவும், சன்மானம்வழங்கப்படும்.

12165

காணவில்லை

எனது கணவர் திரு. தியாகராசா கந்தையா (சைவம்) வயது 43 கடந்த 14.12.90 தொடக்கம் எமது வீட்டிலிருந்து காணாமல் போய் விட்டார். இவரைக் கண்டவர்கள் கீழ் வரும் விலாசத்துக்கு தகவல் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும் முகவரி:

திருமதி கந்தையா
ஆயத்தடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

12166

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத் தலைவருக்கு மகஜர்

# அம்புலன்ஸ் படகுச் சேவை இல்லாவிட்டால் தீவுப்பகுதி மரணங்களைத் தவிர்க்க முடியாது

யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப்பற்றாக்குறையினாலும், மருந்துத் தட்டுப்பாட்டாலும் குழந்தைகள் நோயாளிகளுக்குரிய போஷாக்கு உணவுகளும், விட்டமின்களும் கிடைக்காததினாலும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்று இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளை, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள்:

★ எரிபொருள் தட்டுப்பாட்டால் அரச தனியார் போக்குவரத்து கடந்த ஆறுமாதங்களாக ஸ்தம்பிதத்துள்ளதால் வேலையின்மையும் விலைவாசி உயர்வும் ஏற்பட்டுள்ளன.

★ குடாநாட்டுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் உள்ள தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதால் தனியார் துறை ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ காணாமற் போனவர்கள் பற்றியோ, இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்தோ எதுவிதத் தகவல்களும் கிடைப்பதில்லை.

★ தீவுப்பகுதிகளுக்குப் படகுகள் மூலமாக அம்புலன்ஸ் சேவை ஏற்பாடு செய்தால் மட்டுமே அநாவசிய உயிரிழப்புக்களைத் தவிர்க்கலாம்.

★ உயர் அதிகாரிகள் அத்தியாவசிய சேவை காரணமாக கொழும்புக்குப் போய்வர ஒழுங்கான கப்பல் சேவை அவசியம்.

★ ஆஸ்பத்திரிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படவேண்டும் என்பனவாகும். (74)

## தண்ணீரில் மிதந்து தாத்தா நிகழ்த்திய சாதனை

வயதிற்கும், சாதனைக்கும் சம்பந்தமே இல்லையென நிரூபிக்கின்றார் 72 வயதான முகமது அபூபக்கர். தஞ்சாவூர் மாவட்டம் அதிராம் பட்டினத்தைச் சேர்ந்த இவர் 3 மணித்தியாலங்கள் தண்ணீரில் மிதந்து சாதனையை நிலைநாட்டியுள்ளார். இவர் தொடர்ந்து 10 மணித்தியாலங்கள் நீரில் மிதக்க முயற்சி செய்யப் போவதாகத் தெரிவித்தார். பம்பாயில் உள்ள மகாத்மா காந்தி நினைவு ஒலிம்பிக் நீச்சல் குளத்தில் இவர் இச்சாதனையை, மராட்டிய மாநில பொழுதுபோக்கு நீச்சல் வீரர்கள் சங்க ஆதரவில் நிகழ்த்தினார். இச்சங்கத்தின் செயலாளர் திரு. சாஸ்திரி, வயதான எவரும் இவ்வளவு மணித்தியாலங்கள் நீரில் மிதக்கவில்லை என்று தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில்

## பேராசிரியர் எதிர்நோக்கும் மேலதிக பொறுப்புகள்

யாழ் பல்கலைக் கழகத்தில் சாதாரண விரிவுரையாளர்களின் வேலையை சில பேராசிரியர்கள் நடத்த வேண்டிய நிலை தோன்றியுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக் கழகத்தைச் சர்ந்த சுமார் 25 விரிவுரையாளர்கள் கொழும்புப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றிருப்பதால் இந் நிலை தோன்றியுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தென் பகுதியில் தங்கியுள்ள சில பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கின்ற போதிலும் விரிவுரையாளர்கள் மீண்டும் திரும்பி வருவார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (70)

சபையில் சு.க.எம்.பி கண்டனம்

# நாடு தீப்பற்றி எரிகையில் அரசு வயலட் அக்காவுடன்வீணாகானம்

"வடக்கு, கிழக்கில் பிரச்சினை விஸ்வரூபமெடுத்துள்ளது. நாடு தீப்பற்றி எரிகையில் அரசு வயலட் அக்காவுடன் வீணாகானம் இசைக்கிறது" என்று பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எம்பியான திரு. நிமலசிறிபால டிசில்வா சாடினார்.

மேல்மாகாண முதலமைச்சர், எதிர்க் கட்சித்தலைவர் ஆகியோரின் சில நடவடிக்கைகளையும் பகிரங்கப்படுத்திய திரு.சில்வா, கண்ணாடி மாளிகைக்குள் இருந்து உடைமாற்ற வேண்டாம் என்று மேல்மாகாணசபையை எச்சரித்தார்.

## ரஞ்சன் அவசரக்காரர் என்கிறார் பிரதி சபாநாயகர்

பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு.ரஞ்சன் விஜேரத்ன அவசரக்காரர் என்று பிரதி சபாநாயகர் திரு. காமினிபொன்சேகா பாராளுமன்றத்தில் கூறினார்.

பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரின் செயற்பாடுகள் குறித்துத் தான் சபையில் கிளப்பிய பிரச்சினை தொடர்பாக உரிய விசாரணை ஏதுமின்றி திரு. விஜேரத்ன பொலிஸ்மா அதிபரின் கடிதத்தை வாசிப்பதில் வெளிக்காட்டிய அவசரம் தன்னை அதிர்ச்சிக்கும் குழப்பத்துக்கும் உள்ளாக்கி

## இறங்கு துறைகளை திருத்த நடவடிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள பருத்தித்துறைதுறைமுகத்தையும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வலைப்பாடு இறங்குதுறையையும்துரிதகதியில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திருத்துவதில் தற்போது யாழ் செயலகம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத் திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்

## ஆஸ்பத்திரி இடமாற்றம்

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியை வேலணையில் தற்காலிகமாக இயங்க வைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வைத்தியசாலை பெருமளவு சேதமடைந்ததுடன் இராணுவத்தினரும் அங்கே நிலை கொண்டிருப்பதால் இதனை அவ்விடத்தில் செயற்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் வேலணை ஆஸ்பத்திரிக்கு அதிகமாக

சோவியத் ரஷ்யாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் பற்றிய ஒரு விமரிசன நோக்கு:

# எழ மறுக்கும் கிருதயுகம்

### இப்பொழுது நடந்து கொண்டிருப்பது என்ன?

மூன்றாவது உலக நாடுகள் எனப்படும் வளர்ச்சி குன்றிய, வளர முனையும் நாடுகளில் வாழும் நமக்கு, சோஷலிஸ நாடுகள் எமது இலட்சிய ஆற்றுப்படைகளாக, ஆதரிச தீபங்களாக, நாம் பின்பற்றவேண்டிய உதாரணங்களாக விளங்குபவை. இதனாலே, நாம் எந்த நாட்டின் சோஷலிசம் நமக்குப் பொருத்தமானது, எந்த நாட்டில் அதிக அளவு சோஷலிஸம் இருக்கின்றது என்று கன்னை பிரித்துப் போராடினோம். சம்பந்தப்பட்ட நாடுகள் தமது பிரச்சினைகளைத் தீர்த்து உறவாடத் தொடக்கிய பின்னரும் கூட, நாம். நம்மிடையே ஒருவருச்கொருவர் இப்பொழுதும் முகங்கொடுத்துப் பேசுவது கிடையாது.

### சோஷலிஸ இலட்சியம்

சோஷலிஸ நாடுகளின் பிரச்சினைகளற்ற சுபிட்ச நிலை, நமக்கு நமது இலட்சியப்பிடிப்பை மேலும் இறுக்கிக்கொண்டிருந்தது. நமது சூழல்களில் இன்றும் கனவாகவேயுள்ள வறுமையொழிப்பு, செல்வப்பகிர்வு, உணர்வுத் தட்டுப்பாடு அங்கு நிதர்சன உண்மைகளாக இருப்பது நமக்குப் போராட்ட உத்துதலைத்தந்தது. அத்தகைய நாடுகளையும் நாடுகளில் நடப்பனவற்றையும் யாரேனும் குறைகூறினால் அது ஒரு பெரிய சதியென்று நம்பினோம்; வாதிட்டோம்.

ஆனால், இப்பொழுது சோஷலிஸ நாடுகளில் முக்கியமானவையான ரஷ்யா, சீனாவில் நடைபெறுவன, பாடப்புத்தகசோஷலிஸத்துக்கு முரணானவையாகக் காணப்படுகின்றன.

### சிம்ம சொப்பனம்

மேற்குலகின் முதலாளித்துவ வளர்ச்சிக்கும் மேலாண்மைக்கும் சவாலாக விளங்கியது சோவியத் ஒன்றியம். அங்குதான் 1917 -ல் புரட்சி நடைபெற்றது. மார்க்ஸீயத்தை லெனின் நடைமுறைப்படுத்திய நாடு அது. அந்த நாட்டின் வளர்ச்சியும், வன்மையும் அதன் எதிரணி நாடுகளுக்கு எப்பொழுதும் பயத்தை ஊட்டிக்கொண்டேயிருந்தன முதலாளித்துவம் என்னும் கொள்கை நிலைப்பட்ட நாடுகளுக்கு; அந்தக் கருத்து நிலையின் பிரசாரகர்களுக்கும் சோவியத் ஒன்றியத்தின ''சீரசன'' போக்கு சிம்ம சொப்பனமாகவேயிருந்தது. இதற்காக அவர்கள் சோவியத் ஒன்றியம் பற்றிய ஆய்வுகளை மிக நுண்ணி தாக்கினர். அந்த ஆய்வின் பெறுபேறாகத் தகவல்கள் வெளிக்கொணரப்பட்டபொழுது, அவற்றை முதலாளித்துவ முதன்மை நாடாம் அமெரிக்கச் சதியென்று தட்டிக்கழித்துவிடுவது வழக்காயிற்று.

### விசுவாசிகளிடையே குழப்பம்

1987 முதல் ரஷ்யாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளும், 1989 இல் நடந்தேறிய கிழக்கு ஐரோப்பியப் பொதுவுடைமை ஆட்சிகளின் வீழ்ச்சியும், 1990 இல் ரஷ்யாவினுள் நடைபெறும் அரசியல் விவாதங்களும், சோஷலிஸ விசுவாசிகளிடையே பலத்த மனக்குழப்பதனை ஏற்படுத்தியுள்ளன.

நிழலைத் துரத்தியகதை என்றனர் சிலர்; தெய்வம் வெளியேறிவிட்ட வெறுங்கோயில் என்றனர் வேறுசிலர். இந்த

எமது அரசியல் விமர்சகர்
க. மா. இராசையா

மயக்கநிலையைப் பயன்படுத்திச் சோஷலிஸ சித்தாத்தம் என்பதே நடைமுறைச் சாத்தியமற்ற ஒரு பச்சைக்கனவு என்றனர்; என்கின்றனர்.

இத்தகைய கருத்தோட்டங்களும், கருத்து நிலைத்திருப்புதல்களும் கொடிகட்டிப்பறக்க உதவியுள்ளன சோவியத் ஒன்றியத்தில் நடைபெறும் சில நிகழ்ச்சிகள்.

### இரு முக்கிய நிகழ்ச்சிகள்

அத்தகைய நிகழ்ச்சிகளுள் மிக முக்கியமானவையென்று

## திருத்த நடவடிக்கைகள்

யாழ் மாவட்டத்திலுள்ள பருத்தித்துறைதுறைமுகத்தையும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வலைப்பாடு இறங்குதுறையையும்துரிதகதியில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்திற்கு உணவுப் பொருட்கள் மேலும் அதிகளவில் தேவைப்படுவதால் இத்துறைமுகங்களைத் திருத்துவதில் தற்போது யாழ் செயலகம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத் திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (66)

# மொரீஷியஸின் இராமாயண மோகம்

மொரீஷியஸ் மக்களுக்கும் அரசுக்கும் இராமாயணத்தில் தனி ஆர்வம் பிறந்திருக்கிறது. இவ்வாண்டு நடுப்பகுதியில் அங்கு நடைபெற்ற இராமாயணம் சம்பந்தமான ஆறாவது சர்வதேச மகாநாடு இவ்வெழுச்சியை உருவாக்கியுள்ளது. பிரதமர் அநிருத்த ஜெகந்நாத்தும் அமைச்சர், பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர். இம்மகாநாட்டை ஒரு தேசிய நிகழ்ச்சியாக அரசு கொண்டாடியுள்ளது.

பிரதமரின் தொகுதியிலுள்ள ஹெர்மிடேஜ் என்ற சமூகநலக் கூடம் டஞ்சவடியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது இன்னோர் இடம் சித்திர கூடமாக மாறி உள்ளது இராமாயணச் சொற்பொழிவுகள், பேரணிகள், பூஜைகள், ஓவியப் போட்டிகள் முதலியனவும் நடைபெற்றன.

"எங்கள் முன்னோர்களுக்கு நெருக்கடியை எதிர்கொள்வதற்குத் தேவையான மனோபலத்தை இராமாயணம் தந்தது" என மொரீஷியஸ் கல்வி அமைச்சர் ஏ. பரசுராமன் கூறுகிறார். பூலோக சொர்க்கம் எனப் புகழப்படும் மொரீஷியஸ் இராமாயண காந்தத்தால் கவரப்பட்டுள்ளது.

கிளப்பிய பிரச்சினை தொடர்பாக உரிய விசாரணை ஏதுமின்றி திரு. விஜேரத்ன பொலிஸ்மா அதிபரின் கடிதத்தை வாசிப்பதில் வெளிக்காட்டிய அவசரம் தன்னை அதிர்ச்சிக்கும் குழப்பத்துக்கும் உள்ளாக்கியிருப்பதாக அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலை பெருமளவு சேதமடைந்ததுடன் இராணுவத்தினரும் அங்கே நிலை கொண்டிருப்பதால் இதனை அவ்விடத்தில் செயற்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் வேலணை ஆஸ்பத்திரிக்கு அதிகமாக வருவதால் இங்கு இடநெருக்கடி நிலவுகிறது

இதனையடுத்து வேலணை துரைசாமி மகாவித்தியாலய விடுதியை தற்காலிகமாக இந்த ஆஸ்பத்திரிக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப- 17)

## தர்மப்பணம் விநியோகம்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மாதாந்த தர்மப்பணம் பெறுவோருக்குரிய ஜூன் மாதக் கொடுப்பனவு இன்று புதன் கிழமை யாழ் பிரதம தபாலகத்திலும், மற்றும் உப தபாலகங்களிலும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

## எதிர்க்கட்சித் தலைவராக அத்வானி

லோக்சபாவின் எதிர்க்கட்சித் தலைவராக, பாரதீய ஜனதாக் கட்சித் தலைவரான திரு எல். கே. அத்வானியை சபாநாயகர் திரு. ரபிராய் அங்கீகரித்தார்.

# நீராய்வுக்கூட கருவிகள் சேதம்; ரூ.20 லட்சம் நஷ்டம்

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் தேசிய நீர்வழங்கல் சபையின் நீராய்வு கூடம் முற்றாகச் சேதமடைந்ததினால் 20 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப்பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

இந்நீராய்வு கூடத்திற்கு அமெரிக்க நிறுவனம் வழங்கிய நீராய்வுக்கருவிகளே இவ்வாறு சேதமடைந்தன.

எனினும் நீர் பற்றிய ஆராய்ச்சிச் சோதனை தற்பொழுது நடைபெற்று வருகின்றது. தற்போது பதின்மூன்று நீர்வடிகால் அமைப்புக்களில் நபினார்தீயும். வவுனியாவுமே செயற்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ப- 11)

மயக்கநிலையைப் பயன்படுத்திச் சோஷலிஸ சித்தாந்தம் என்பதே நடைமுறைச் சாத்தியமற்ற ஒரு பச்சைக்கனவு என்றனர்; என்கின்றனர்.

இத்தகைய கருத்தோட்டங்களும், கருத்து நிலைத்திருப்புதல்களும் கொடிகட்டிப்பறக்க உதவியுள்ளன சோவியத் ஒன்றியத்தில் நடைபெறும் சில நிகழ்ச்சிகள்.

## இரு முக்கிய நிகழ்ச்சிகள்

அத்தகைய நிகழ்ச்சிகளுள் மிக முக்கியமானவை யென்று எடுத்துக் கூறப்படத்தக்கவை இரண்டு:

ஒன்று, சென்ற நவம்பர் 7ஆம் திகதி புரட்சிவிழாத்தினத்தன்று, செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற புரட்சியெதிர்ப்புக் கோஷமும், துப்பாக்கிச்சம்பவமுமாகும்.

மற்றது, கடந்த இரண்டொரு வருடங்களாகப் பேசப்பட்டுவந்து, இப்பொழுது ஸ்திரமான பிரேரணையாக முன்வைக்கப்படும் சந்தைப்பொருளாதாரக் கோரிக்கையாகும்.

இவையிரண்டும் எந்த சோஷலிஸ விசுவாசியினதும் ஆணிவேர்களைப்பதம் பார்ப்பவையாகும்.

கிழக்கு ஜெர்மனிமுதல் செக்கோஸ்லாவாக்கியா வரை, ஆமீனியா முதல் கஸாக்ஸ்தான் வரை இது வரை பல இடங்களில் நடந்தேறிய பல்வேறு கோஷங்களைப் பார்க்கும் பொழுது, செஞ்சதுக்கத்தில் நவம்பர் 7-ம் திகதிபன்று நடைபெற்றவை அத்துணைப்பெரிய ஆச்சரியத்தைத் தருவன வல்ல ஆனால் இந்தச் சந்தைப் பொருளாதாரக் கோஷம் சற்று ஆழமானது; முக்கியமானது - ஏனெனில் இது ஒரு பொருளாதாரக் கோரிக்கை

அந்தக்கோரிக்கை எவற்றைச் சுட்டுகின்றது? அதன் முக்கியத்துவம் யாது?

## சந்தைப் பொருளாதார கோஷம்

சோவியத் ஒன்றியத்தில் நடைமுறையிலுள்ள பொருளாதார அமைப்பானது சமதர்ம அமைப்பாகும். இலக்கண விதிப்படி கூறினால், இந்தப் பொருளாதாரத்தில், "தேவைகட்கேற்ற பகிர்வும் திறமைகட்கேற்ற உழைப்பும்" ஊர்ஜிதப் படுத்தப்பட்டிருக்கும், தனியார் லாபம், என்பது கிடையாது. உழைப்புச்சுரண்டல் என்பது இருக்கக் கூடாது. அத்தகைய ஒரு பொருளாதார முறைமை நிறுவப்படுவதற்கான முயற்சிகள் லெனினின் "புதிய பொருளாதாரக் கொள்கை"க் காலம் முதல் எடுக்கப்பட்டு வந்துள்ளன.

— (தொடரும்)

கிறிஸ்து பிறப்பு சிந்தனை 4

## நம்பிக்கையின் ஆதவன்

இதோ மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி. அது என்ன வெனில் கிறீஸ்து இயேசு- மீட்பர் பிறந்துள்ளார். காலத்திற்குக் காலம் பூகம்பமாகக் கிளம்பும் இனக்கலவரங்களும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் கிறிஸ்மஸ் விழாவிற்கு கரிபூசுவது போல ஒரு நினைப்பு. சிலர் இது கறுப்பு- கிறிஸ்மஸ் என்று கண்ணீரில் நனைகின்றனர். கிறிஸ்து பிறப்பு விழா பகட்டு சற்று மங்கியிருக்கிறதே தவிர விழாவின் பொருள் தரித்திரமடையவில்லை மாறாக, தமிழ் மண்ணில் தற்பொழுது தான் இயேசு- அவதாரம் இன்னும் சுடர்விடுகிறது.

''காலம் ஒரு நாள் மாறும், நம் கவலைகள் யாவும் தீரும்'' என்ற எதிர்பார்ப்புடன் அன்று ஒடுக்கப்பட்ட மக்கள் தம் உரிமை வாழ்விற்காக ஏங்கினர். மனிதன் ஆண்டவனைக் கூவியழைக்கும் கட்டமே தன் இயலாமையின் எல்லைக் கோட்டில்தான். அநீதியினதும், அதர்மத்தினதும் பிடியிலிருந்து மனிதனை விடுவிப்பது தான் அவதாரத்தின் நோக்கம் என்கிறது பகவத்கீதை ''ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்க வந்தேன்'' என்றார் எம் அவதார புருஷன் இயேசு.

இயேசு கொணர்ந்த சுதந்திர வாழ்வைச் சுவைக்க எல்லோரும் கொடுத்து வைத்தவரல்ல. இறைவன் அவ்வுரிமையை மறுத்தாரோ அன்றேல் பறித்தாரோ என்பதல்ல. மனிதன் அவன் கனியிருக்க காய் கவருகின்றான் அதுதான் காரணம். ஆண்டவர் இயேசு பிறப்பின் மாபெரும் மகிழ்ச்சி செய்தி முதன் முதல் வெட்ட வெளியில் சாமக் காவல் காத்திருந்த இடையர் காதில் எட்டியது.

அக்காலத்துசமுதாயத்தின்பெரும்புள்ளிகளானபரிசேய் சதுசேய், மறைவல்லு கூட்டத்தோடு ஒப்பிடும்போது இடையர் வெறும் செல்லாக் காசுகள். ஆயினும் அந்தப்பாமர இடையர் மனங்கள் சிக்கல்கள். சில்லறைப் பிரச்சினைகள் இல்லாத எளிமையின் இருப்பிடமாய் விளங்கின.

மெசியாவுக்காக காத்திருந்த மாடமாளிகைகள் கோட்டை விட்டுவிட்டன. கோவில்களும், குருகுலத்தவரும் ஏமாந்து போயினர். அறிஞரும், ஞானிகளும் தூங்கி விட்டனர். ஆண்டவன் முன்னணையில் பஞ்சணை கொண்டார் விழித்திருந்த ஆட்டிடையர் இறை -தரிசனம் கண்டார்.

இயேசுவின் தாய் மரியாள் பாடுவது போல நெஞ்சில் செருக்குற்றோர் சிதறடிக்கப்படுவர். வலியோர் அரியணை விட்டகல, செல்வர் வெறுமையுற தாழ்ந்தோரை இறைவன் உயர்த்துவார் பசித்தவர் (நீதிக்காக, உரிமைக்காக, உண்மைக்காக) நிறைவு அடைவர்.

கிறிஸ்து பிறப்பு விழாவில் இந்த நம்பிக்கை மீண்டும் தட்டி எழுப்பப்படுகிறது. சுதந்திர தாகம் மீண்டும் உயிர் பெறுகிறது. கலப்படமில்லாத மனங்கள் குளிர்ச்சி பெறுகின்றன.

சுவாமி ஜீவா போல்

## காலமானார்

### திரு. கதிரவேலு நல்லையா
### (மாங்கன்று நல்லையா)

இளைப்பாறிய திரு. கதிரவேலு நல்லையா காலமானார் அன்னார் காலஞ்சென்ற திரு. கதிரவேலு, வள்ளிப்பிள்ளை (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மகனும் தையல்நாயகியின் அன்புக் கணவரும், இராசையா (மலேசியா), காலஞ்சென்ற பொன்மலர் (மலேசியா), மனோன்மணி (மலேசியா) ஆகியோரின் அன்புச்

# யாழ் மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியை அடுத்த ஆண்டு இயங்கவைக்க ஏற்பாடு

யாழ் மாவட்ட கூட்டுறவுக் கல்லூரி எதிர்வரும் தை மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அசாதாரண நிலை காரணமாக சில ஆண்டுகள் இயங்க முடியாதிருந்த இக்கல்லூரியை மீண்டும் ஆரம்பிக்க யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அண்மையில் யாழ் கூட்டுறவு சபை அலுவலகத்தில் இடம்பெற்ற பல நோ. கூ. சங்க தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கூட்டுறவுச் சபை செயலாளரும் இக் கல்லூரி அதிபருமான எஸ். சிவசுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

இங்கு கனிஷ்ட, சாதாரண, உயர்தரம் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்ட வகுப்புக்களில் கூட்டுறவுப் பணியாளர்கள் உட்பட பலருக்குப் பயிற்சி அளிக்கப்படவிருக்கின்றது.

பல நோ. கூ. சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் உட்பட யாழ் மாவட்டத்திலுள்ள அநேக கூட்டுறவுச் சங்கங்களில் ஐயாயிரத்திற்கும் அதிகமான பணியாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

இவர்களுக்கு முகாமைத்துவம், விற்பனையியல், கணக்கியல் போன்ற விடயங்களில் கூட்டுறவுத்துறை சார்ந்த போதனைகளும், பயிற்சிகளும் அவசியம் என்பதனால் இக்கல்லூரியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதனை கூட்டுறவாளர்கள் வலியுறுத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66)

## புத்தபிக்குவிடம் ஆயுத முனையில் 30 ஆயிரம் ரூபா கொள்ளை!

கண்டியில் பௌத்த பிக்கு ஒருவரிடமிருந்து முப்பதாயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர் மருந்துகள் கொள்வனவு செய்வதற்காகச் சென்றபோது ஆயுதம் தாங்கிய மூன்று இளைஞர்கள் இவரைப்பயமுறுத்தி பணத்தைப் பறித்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (33)

## இரத்த வங்கியில் இரத்தத்திற்கு பற்றாக்குறை

யாழ் போதனா வைத்திய சாலையில் இயங்கும் இரத்த வங்கிக்கு 1 மாதத்திற்கு போதுமான ஆய்வுகளுக்குரிய மருந்துவகைகள் மாத்திரமே கிடைக்கப்பட்டுள்ளதாக இரத்த வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரத்த வங்கியில் ஓரளவு சேமிப்பு தற்பொழுது இருக்கின்ற போதிலும் நோயாளர்களின் அதிகரிப்பால் இது குறைவடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நாளிற்கு குறைந்தது 15 பேர் இரத்ததானம் செய்தால் இரத்த வங்கியை குறைவில்லாமல் இயக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (70)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பாரபட்சம் காட்டப்படுகிறது!

ருவைத்திலிருந்து நாடு திரும்பவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானவர்களுக்கு பலவித உதவிகளையும் செய்வதில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பணியகம் பாரபட்சம் காட்டுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு வேறு நாடுகவில் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதிலும் சிங்கள வருக்கும் முஸ்லீம்களுக்குமே முக்கியமாக உதவுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பாக வடக்கு கிழக்கில் உள்ள அரசு சார் பற்ற தொண்டர் ஸ்தாபனம் மேற்படி பணியகத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது சாதகமான பதில் எதுவும் இடைக்கவில்லை.

## இறைச்சிக்கடை குத்தகைக்கு விண்ணப்பம்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் இறைச்சிக்கடைகள், சந்தைகள் போன்றவற்றை 1991-ம் ஆண்டில் குத்தகைக்கு கொடுத்தல் சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

விரும்பும் சகலரும் கேள்விப்பத்திரங்களைச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும், 28-ந்

ஷெல்...

முல்லைத்தீவு, மாங்குளம்

## இலங்கை வங்கிக் கிளைகளை வவுனியாவிற்கு மாற்ற முயற்சி

மாங்குளம், முல்லைத் தீவு இலங்கை வங்கிக் கிளைகளை வவுனியாவுக்கு இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இராணுவப் பிடியில் சிக்கியிருக்கும் இலங்கைவங்கிக்கிளையையும், மாங்குளத்தில் இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த இக்கிளையையும்தற்போதைய சூழலைப் பயன்படுத்தி வவுனியாவிற்கு இடம் மாற்ற வங்கி உயர் அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

இத்தகவலையறிந்த இவ்வூர் மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள் மேற்படி வங்கிகளை வவுனியாவிற்கு இடம் மாற்றாது அயல்கிராமங்களில் வங்கிகளை இயங்கவைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

சென்னை விமான நிலையத்தில்

## சந்திரசேகர் வரவேற்பில் வாழப்பாடி புறக்கணிப்பு!

இந்திய பிரதமர் திரு. சந்திரசேகர் நேற்று முதற் தடவையாக பிரதமர் என்ற கோதாவில் சென்னை விமானநிலையம் வந்தடைந்த போது அவரை ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா, முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா முதலான பல பிரமுகர்கள் வரவேற்றனர்.

பிரதமரை வரவேற்கும் கேந்திர ஸ்தானத்திற்குள் இந்திரா காங்கிரஸ் தமிழகத் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி செல்ல பொலிஸார் அனுமதிக்காததால் பரபரப்பு ஏற்பட்டது. காங்கிரஸ் தொண்டர்கள் உணர்ச்சி வசப்பட்டு ஆர்ப்பரித்தனர். திரு. ராமமூர்த்தி அந்த நுழைவாயிலின் முன்பாக தொண்டர்களுடன் அமர்ந்து கொண்டார்.

நிலைமையை அறிந்த பிரதமர் அவர்களை அணமித்து அவர்களது வரவேற்பையும் ஏற்றுக்கொண்டார்.

பருத்தித்துறை துறைமுகத்தில்

## சேதமான வள்ளங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருட்களை கரைக்குக் கொண்டுவரும் இழுவைப்படகுகளைக் கட்டி இழுத்து வரும் மோட்டார் வரும் போது கடுமையான கடற் சொந்தளிப்பினால் இவ்வள்ளங்கள் கப்பலுடனும் கரையிலும் மோதுண்டதனால் சேதமடைய நேர்ந்தது.

தனியார் மோட்டார் வள்

இளைப்பாறிய திரு. கதிரவேலு நர்லையா காலமானார் அன்னார் காலஞ்சென்ற திரு. கதிரவேலு, வள்ளிப்பிள்ளை (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மகனும் தையல்நாயகியின் அன்புக் கணவரும், இராசையா (மலேசியா), காலஞ்சென்ற பொன்மலர் (மலேசியா), மனோன்மணி (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சச்சிதானந்தன் (விவசாய திணைக்களம்-முழங்காவில்), நேசமலர், குணமலர் (லண்டன்), உருத்திராதேவி (ஆராய்ச்சி நிலையம் — திருநெல்வேலி), றஞ்சிதமலர் (மிருக வைத்திய நிலையம் —சங்கானை), புஸ்பமலர், சற்குணாநந்தன் (ஜேர்மனி), கலைச்செல்வி (தொழில் நுட்பக் கல்லூரி)) தவச்செல்வி (தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, பக்தகுணநாதன் (துறைமுக அதிகார சபை — கொழும்பு) மனோகரன் (லண்டன்), தவராஜமித்திரன் (ஓமான்), கணேசலிங்கம்( சி. ஐ. சி. நிறுவனம்—கொழும்பு) சந்திரஜோதி (பிறவுண்சன்ஸ் நிறுவனம் — கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தசாமி, இரத்தினசபாபதி. செல்வராசா, குணநாயகம், இராஜேஸ்வரி, சந்திராதேவி (ஆசிரியை — (கோப்பாய்), சிவலோகநாதன் (விவசாய உத்தியோகத்தர்—யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-12-90 புதன்கிழமை இன்று நண்பகல் 12-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் கணக்கமரத்தடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவிததலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
இ. கணேசலிங்கம்,
12160

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 26-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

இது தொடர்பாக வடக்கு கிழக்கில் உள்ள அரசு சார்பற்ற தொண்டர் ஸ்தாபனம் மேற்படி பணியகத்திடம்

## ஷெல்...

களுக்குச் செல்ல அச்சமடைந்துள்ளனர்.

ஏற்கனவே இரண்டு தடவை மக்கள் அப்பகுதிகளுக்கு ஒன்று கூடிச் சென்று தமது பொருள்களை எடுத்துவர முயன்றனரெனினும் மேற்படி தாக்குதல் காரணமாக கிடைத்தவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## நத்தார் ..

கள் வெடிக்காத நிலையில் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டன.

இதேவேளை ஆனையிறவு ராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டது.

(ப- 32 ப-5 71, ப-4)

## தமிழ்...

கால சேவை வழங்குவதற்கு சுகாதாரத் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்த தமிழ் அதிகாரி இவர்களுக்கு சேவை வழங்க முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (74)

கோரப்படுகின்றன.

விரும்பும் சகலரும் கேள்விப்பத்திரங்களைச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும், 28-ந் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (71)

## திருமலையில்—

நேற்றுக்கைதான இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. 71

## ஆடம்பரமின்றி...

கள் ஆடம்பரமின்றி பக்தி சிரத்தையுடன் திருநாட் பூசைபலியில் பெருமளவில் பங்கு கொண்டனர்.

யாழ் ஆசனக்கோவிலில் திருப்பலிப்பூசையை ஒப்புக் கொடுத்து உரையாற்றிய ராங்குத்தந்தை வண. பிதா ஜெபநேசன் அடிகளார் போர் சூழலுக்கேற்ப இம்முறை நத்தார் அமைதியாக அனுஷ்டிக்கப்படுவதாகக் கூறினார்.

## இரண்டாம் தர...

னால் நடாத்தப்படும். இப் பயிற்சியில் பதவி உயர்பெற்ற சகல இரண்டாம் தர அதிபர்களையும் பங்குபற்றுமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருட்களை கரைக்குக் கொண்டுவரும் இழுவைப்படகுகளைக் கட்டி இழுத்து வரும் மோட்டார் வள்ளங்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்காக கடந்த வாரம் 36 ஆயிரத்து 550 ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் லங்காசிறி என்ற உணவுக் கப்பலில் இருந்து பொருட்களைக் கொண்டு வரும் போது கடுமையான கடற் கொந்தளிப்பினால் இவ்வள்ளங்கள் கப்பலுடனும் கரையிலும் மோதுண்டதனால் சேதமடைய நேர்ந்தது.

தனியார் மோட்டார் வள்ளங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்த யாழ் செயலகம் இதன் உரிமையாளர்கள் மூவருக்கும் இப்பணத்தை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நிதியில் இருந்து வழங்கியது. (66)

### கிளி. விவசாயபீடத்தின்

# காளான் உற்பத்திக்கு 3லட்சம் ரூபா ஒதுக்கீடு

விவசாய பீட உயிரியல் துறைக்கு காளான் வளர்ப்பிற்கு 3லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது இக்காளான் வளர்ப்பு யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் மேற் கொள்ளப்படும்.

இதேவேளை கிளிநொச்சியில் இயங்கும் விவசாய பீட வேளாண்மைதுறைக்கு 10லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் ஒதுக்கீட்டிலிருந்து 35 ஏக்கர் காணியில் பண்ணை வளர்ப்பு மேற்கொள்ளப்படும் எனவும் மான், மரை, முயல் போன்ற மிருகங்களையும் கல்வித்தேவையின் பொருட்டு வளர்க்சத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## நினைவுக்கூட்டம்

மாணவரவையின் முன்னாள் மாணவரவைத்தலைவரும்விஞ்ஞானபீடமாணவனும் விடுதலைப் போராளியுமாகிய சு. ஸ்ரீஸ்கந்தராஜா (லெப்டினன் காண்டீபன்) அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.